www.freetnbooks.com

# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2025

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | |

**நேரம்: 2.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்:60**

**I உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

1. பிறரிடம் நான் ________ பேசுவேன்
   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்
2. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) மூச்சு + அடக்கி ஆ) மூச் + அடக்கி
   இ) மூச் + சடக்கி ஈ) மூச்சை + அடக்கி
3. தவறான சொல் ________
   அ) கண்டான் ஆ) வென்ரான் இ) நண்டு ஈ) வண்டு
4. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ________
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
5. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ________
   அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை
6. கதிர் முற்றியதும் ________ செய்வர்.
   அ) அறுவடை ஆ) கொடி இ) நடவு ஈ) களையெடுத்தல்

**II பொருத்துக.** **4x1=4**

7. விடிவெள்ளி – பஞ்சுமெத்தை
8. மணல் – ஊஞ்சல்
9. புயல் – போர்வை
10. பனிமூட்டம் – விளக்கு

**III சொற்றொடரில் அமைத்து எழுதுக.** **2x1=2**

11. கடல்
12. வணிகம்

**IV எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x2=10**

13. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது ?
14. போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது ?
15. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும் ?
16. நான்கு நிலங்கள் என்பன யாவை ?
17. இன எழுத்துகள் என்றால் என்ன ?
18. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை ?
19. வணிகம் என்றால் என்ன ?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner

www.freetnbooks.com



**V எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **3x4=12**

20. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள் ?
21. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை ?
22. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை ?
23. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர் ?

**VI அடிமாறாமல் எழுதுக.** **2+2=4**

24. "விருந்து" என முடியும் திருக்குறளை எழுதுக.
25. சொல்லுக ... எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**VII அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **6x2=12**

26. பிழை திருத்தி எழுதுக.
    அ) தெண்றல் ஆ) நன்றி
27. விடுகதைக்கு விடை காண்க.
    அ) தண்ணீரில் கிடப்பான்; தள்ளாடித் தள்ளாடி நடப்பான்; காலில்லாத அவன் யார் ?
    ஆ) பேசமுடியாத ஓட்டப்பந்தய வீரனுக்கு வாய்க்கு மட்டும் பூட்டு. அவன் யார் ?
28. பொருள் தருக.
    அ) கழனி ஆ) பார்
29. தொகைச்சொல்லை விளக்கி எழுதுக.
    முக்கனி
30. கலைச்சொல் எழுதுக.
    அ) CONSUMER ஆ) PALACE
31. அகர வரிசைப்படுத்தி எழுதுக.
    நீலம், முத்து, பவளம், கோமேதகம்

**VIII விடையளிக்க.** **2x5=10**

32. அ) உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.

*(அல்லது)*

ஆ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

33. அ) பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) "பொங்கல் திருநாள்" – இத்தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

***/***

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner